**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி**
**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2025 ம் வருடம் ஜூன் மாதம் 04 ம் நாள் புதன்கிழமை**

**I.A.No.02/2025**
**in**
**O.S.No.02/2019**

மூமினாள் பேகம் வகையறா ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

செல்வம் தல்மேதா (இறப்பு) வகையறா ... எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 04.06.2025 இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.லிங்கராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர்/வாதி தரப்பில் 14 ம் பிரதிவாதி கடந்த 29.01.2023 ம் தேதி காலமாகி விட்டதால் அவரது வாரிசுகளை அசல் வழக்கில் 29 முதல் 32 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை நடத்த உத்தரவிடக்கோரி சி.பி.சி. கட்டளை 22 விதி 4 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.</u>**

மனுதாரர்/வாதி தரப்பில் 14ம் பிரதிவாதி டார்வின் என்பவர் 29.01.2023ம் தேதி காலமாகி விட்டதாகவும், வழக்கு ஏற்கனவே உயர்நீதிமன்ற மதுரை கிளையில் C.R.P.No.2551/2014ல் நிலுவையில் இருந்தபோது இறந்துபோன 14ம் பிரதிவாதிக்கு உயர்நீதிமன்றத்தில் வாரிசு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படியாருக்கு வழக்கின் பிராதில் வாரிசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதால் அவரது மனைவியான டொலின், ஆல்வின் என்ற மகனும், ஷெர்லின், ஜெர்ஷினி என்ற 2 மகள்களும் வாரிசுகளாக இருந்து வருகிறார்கள் என்றும், மேற்படி நபர்களை வழக்கில் 29 முதல் 32 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை நடத்த உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.</u>**

மனுதாரர்கள் தரப்பில் மனுவில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் மறுக்கப்படுகிறது என்றும், சீராய்வு வழக்கு மதுரை உயர்நீதிமன்ற கிளையில் நடைபெற்றாலும் இந்த அசல் வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் தான் இருந்து வந்ததாகவும், சீராய்வு மனுவில் வாரிசு சேர்த்தபோதே இந்த அசல் வழக்கில் 14ம் பிரதிவாதியின் வாரிசுகளை அசல் வழக்கில் சேர்க்காமல் இருந்து வந்ததாகவும், 14ம் பிரதிவாதி 29.01.2023ம் தேதி இறந்தது தெரிந்தும் அன்றையதினத்திலிருந்து காலதாமதத்தை சட்டப்படி கணக்கிட வேண்டும் என்றும், மேலும் காலவரம்பு சட்டம் பிரிவு 5, அபேட்மெண்டு செட்டசைடு மனுவை தாக்கல் செய்யாமல் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுவை தள்ளுபடி

செய்யக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தரப்பில் 14ம் பிரதிவாதி டார்வின் என்பவர் கடந்த 29.01.2023ம் தேதி காலமாகி விட்டதாகவும், மேற்படியாரின் வாரிசுகளை அசல் வழக்கில் 29 முதல் 32 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை நடத்த உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் 14ம் பிரதிவாதி 29.01.2023ம் தேதி இறந்த விபரம் மனுதாரருக்கு தெரிந்திருந்தும் அப்போதே வாரிசு மனு தாக்கல் செய்யாமல் காலதாமதமாக மனு தாக்கல் செய்துள்ளதாலும், காலவரம்பு சட்டம் பிரிவு 5, அபேட்மெண்டு, செட்டசைடு மனுவை தாக்கல் செய்யாமலும் மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கானது கடந்த 22.06.2016ம் தேதி முதுகுளத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் தவறுக்கைக்காக தள்ளுபடி செய்யப்பட்டு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் C.R.P.No.1151 of 2017, Dated : 05.08.2024ல் ஏற்பட்ட உத்தரவின்படி கடந்த 19.12.2024ம் தேதி மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

அசல் வழக்கின் 14ம் பிரதிவாதியான டார்வின் என்பவர் கடந்த 29.01.2023ம் தேதி இறந்தபின்பு அவரது வாரிசுகள் குறித்து ஏற்கனவே மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் C.R.P.No.1151 of 2017 மனுவில் வாரிசு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது அசல் வழக்கிலும் 14ம் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்கக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மாண்பமை உயர்நீதிமன்றத்தில் இந்த மனுவின் பொருண்மை தீர்மானிக்கப்பட்டிருப்பதன் அடிப்படையில் அசல் வழக்கில் மேற்படியாரின் வாரிசுகளை சேர்த்து வழக்கினை தீர்மானிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

**மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 04.06.2025 இன்று அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2025.06.04 17:44:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:** இல்லை

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2025.06.04 17:44:06 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

I.A.No.01/2025
**in**
O.S.No.39/2024

Date: 04.06.2025
IA order